(3) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) ஓர் உறுப்பினர் வீட்டில் காவல் துறையினர் சோதனையிட்டதாகச் சொல்லப்பெறுவது குறித்து.

திரு. க. சுப்பு : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, எங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை வைத்துப் பேசுகிறோம். கிடைக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டு பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமை பறிக்கப்படுமானால் அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தங்களுடையது; இல்லை என்றால் அவைக்கு வருவதில் பிரயோஜனம் கிடையாது. அந்த வகையிலே, கிடைத்த ஒரு தகவலை வைத்து, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே பேசினார்கள். புட்லூர் மர்ம கொலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி எங்கள் தலைவர் இங்கே குறிப்பிட்ட பின்னால் இன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அபாயம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசரத்தினம் அவர்களுடைய வீட்டை காவல் துறையினர் திடீரென்று போய் சோதனை போட்டிருக்கிறார்கள்; 4½ மணி நேரம் சோதனை போட்டு, அங்கே இருந்த பல்வேறு விதமான ரிக்கார்டுகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தால் உறுப்பினர்கள் எப்படி இங்கே தகவல்களைத் தெரிவிக்க முடியும்? இது உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாகும். ஆகவே, இது அவை உரிமையை மீறிய ஒரு செயல் என்பதை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-00].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அவை உரிமை மீறல் என்பதைத் தாங்கள் எழுத்து மூலமாகத் தந்திருக்கலாம். இவ்வளவு மிகுந்த அக்கறையுடன் உரிமைப் பிரச்சினை எழுப்ப நினைக்கும் தாங்கள் எழுத்து மூலமாகத் தந்திருக்கலாம். தாங்கள் காலையிலேயே தந்திருக்கலாம். காலையிலே பத்திரிகையில் வந்திருக்கும். ஆகவே நீங்கள் காலையிலே என்னிடம் எழுதிக் கொடுக்காமல் இப்போது எழுப்பும்போது அதற்கு அமைச்சரவர்களிடம் பதில் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : சரி, எழுதித் தருகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS